AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 11 PRINTED SIZE: 388.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Black/white ASR: MYR 1,693.00 ITEM ID: MY0062331226



26 JAN, 2025

# TNB says committed to assist landlords who were saddled with RM8.5m debt from illegal Bitcoin mining

Malaysian Nanban (Sunday), Malaysia

## சட்டவிரோத பிட்கோயின் நடவடிக்கை:

# வெ. 85 லட்சம் கடன் பட்டிருக்கும் சொத்து உரிமையாளர்களுக்கு டி.என்.பி. உதவும்




கோலாலம்பூர், ஜன. 26- வாடகைக்கு குடியிருப்பவர்களின் சட்டவிரோத பிட்கோயின் இலக்கவியல் நாணய தொழில் காரணமாக 85 லட்சம் வெள்ளி பெரும் கடன் சுமையில் சிக்கி தவிக்கும் சொத்து உரிமையாளர்கள் பலருக்கான சிறந்த தீர்வை கண்டறிய பெட்டாலிங் ஜெயா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் லீ சியா சுங்குடன் தான் தொடர்பு கொள்ள இருப்பதாக தெனாகா நேஷனல் பெர்ஹாட் (டி.என்.பி) நேற்று கூறிற்று.

TNB Careline Facebook பக்கத்தில் (24 மணி நேர சேவை) அல்லது 1-300-88-5454 என்ற தொலைபேசி எண்ணில் (திங்கள்- வெள்ளி காலை 8 - இரவு 7 மணி மற்றும் வாரயிறுதிகளில் அல்லது பொது விடுமுறையின் போது காலை 8- மாலை 5) பொது மக்கள் தொடர்பு கொள்ளலாம் என்று அது மேலும் கூறிற்று.

சொத்து உரிமையாளர்கள் தங்களுடைய கட்டடங்களுக்கு புதிதாக ஒரு வாடகைக்கு வரும் போதெல்லாம் ஒரு குடியிருப்பாளர் மாற்ற (கோட்) விண்ணப்பத்தை டி.என்.பி.யிடம் சமர்ப்பிக்க வேண்டும் என நினைவுறுத்த விரும்புகிறோம்.

எதிர்காலத்தில் மின்சார கட்டண கணக்கு தொடர்பான சர்ச்சைகள் எழாமல் தவிர்க்க இந்த நடவடிக்கை உதவ முடியும் என்று டி.என்.பி. ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

வாடகைக்கு குடியிருப்பவர்கள் சட்டவிரோத பிட்கோயின் தொழிலை நடத்த சொத்து உரிமையாளர்களின் அடையாளத்தை கள்ளத்தனமாக பயன்படுத்தியதால் 45 வீட்டு உரிமையாளர்கள் மற்றும் தொழில் நடத்துநர்கள் மின்சார கட்டணமாக மொத்தம் 85 கோடி வெள்ளி இழப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்று நேற்று முன்தினம் கூறப்பட்டது.

டி.என்.பி.யிடம் இருந்து அறிவிக்கைகளை பெறும் வரை சட்டவிரோத நடவடிக்கைகளை பற்றி தாங்கள் தெரிந்து கொள்ளாமல் இருந்திருப்பதாக சொத்து உரிமையாளர்கள் கூறியுள்ளனர்.

சட்டவிரோத பிட்கோயின் நடவடிக்கையை விசாரணை செய்ய ஒரு பணிக்குழுவை அமைக்குமாறு டி.என்.பி.யை பெட்டாலிங் ஜெயா தொகுதி எம்.பி.லீ சியான் சுங் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தை எழுப்ப லீ திட்டமிடுகிறார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.